# சர்வவியாபி

SARVA VIABI

MISSION PRESS 1840

| 28-10-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் ஐப்பசி 11 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 112 பக்கம் - 12 | இதழ் 42 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## மேதகு பேராயர் Dr. S. மைக்கேல் அகஸ்டின் ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



*Most Rev. Dr. S. Michael Augustine*
(1933-2017)

நமது அன்புக்கும் பாசத்திற்கும் உரிய புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட முன்னாள் பேராயர் மேதகு டாக்டர் **S. மைக்கேல் அகஸ்டின்** ஆண்டகை அவர்கள் இறையடி சேர்ந்து, வரும் **4-11-2018** - உடன் ஓர் ஆண்டு நிறைவு பெறும் இவ்வேளையில், அவர்களை பக்தியோடு நினைவு கூர்கிறோம். அவர் வழியாக இறைவன் நமக்கு அளித்த அனைத்து வரங்களுக்கும், உதவிகளுக்கும், வழிகாட்டுதலுக்கும் நன்றி கூறி, மேதகு ஆண்டகை அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கிறோம்.

இறைவனின் நித்திய பேரின்பத்தில் இளைப்பாறும் மேதகு பேராயர் அவர்கள் நம் அனைவருக்காகவும் இறைவனிடம் பரிந்துபேச வேண்டுமென்று அவரிடம் செபிப்போம்.

- ஆசிரியர், சர்வ வியாபி.

---

## புனித பட்ட சிறப்புத் திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை



**திருத்தந்தை 6-ஆம் பவுல் - பேராயர் ஆஸ்கர் ரொமேரோ**

**இ**யேசுவைத் தேடி ஓடிவந்த அந்த மனிதருக்கு (மாற்கு 10:17) நற்செய்தியில் பெயர் தரப்படாததால், அந்த மனிதரில் நம்மையே நாம் அடையாளப்படுத்திக் கொள்ளலாம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அக்டோபர் 14, கடந்த ஞாயிறன்று வழங்கிய மறையுரையில் கூறினார்.

திருத்தந்தை 6ம் பவுல், சான் சால்வதோர் பேராயர் ஆஸ்கர் ரொமேரோ உட்பட, ஏழு அருளாளர் களுக்கு புனித பட்டம் வழங்கும் சிறப்புத் திருப்பலியை, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில், தலைமை யேற்று நடத்தியத் திருத் தந்தை, இயேசுவைத் தேடிச் சென்றவர், நிலை வாழ்வடைய விரும்பியதைப் போலவே நாம் ஒவ்வொரு வரும் விரும்புகிறோம் என்பதை தன் மறையுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டார். கட்டளைகளைக் கடைபிடித்தால் நிலை வாழ்வடை யலாம் என்று கூறிய இயேசு, அதற்கு அடுத்ததாக முழுமையான சுதந்திரமான அன்பு வழிக்கு அந்த மனிதரை அழைத்தார் என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, சுதந்திரமான அன்புக்குத் தடையாக இருப்பது, இவ்வுலக செல்வங்கள் மீது நாம் கொள்ளும் பற்று என்று எடுத்துரைத்தார்.

**நம் உள்ளங்கள் காந்தம் போன்றவை:** அன்பை நோக்கி கவர்ந்திழுக்கப்படும் நம் உள்ளங்கள் காந்தங்கள் போன் றவை என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அன்புக்குப் பதிலாக, இவ்வுலக செல்வங்ளால் ஈர்க்கப்படும் உள்ளங்கள், அங்கேயே தங்கிவிடும் ஆபத்து உள்ளது என்று கூறினார். அனைத்தையும் தியாகம் செய்ய மனமின்றி, செல்வங்களிலேயே சிறைப்படும் நாமும், நம் திருஅவையும், நம்மை மையமாக்கி,

தொடர்ச்சி 12-ஆம் பக்கம்..

ஆசிரியர் பேனா...

# இறைவனின் இரக்கத்திற்காக செபிப்போம்

**நமது திருத்தந்தை பிரான்சிஸ்** அவர்கள் ஓர் இதழியலார் நேர்காணலின்போது Mercy - The Essence of the Gospel and the KEY to CHRISTIAN LIFE (இரக்கம் - நற்செய்தியின் சாரம்சம் மற்றும் கிறிஸ்தவ வாழ்வுக்கு திறவுகோல்) என்ற நூலினைக் குறிப்பிட்டார். "**இந்நூல் எனக்கு எவ்வளவோ நலன்களைத் தந்துள்ளது**" என்று கூறினார். **மேதகு கர்தினால் வால்டர் காஸ்பர்** அவர்கள் எழுதி 2012-இல் ஜெர்மன் மொழியில் வெளியிடப்பட்ட அழகிய நூல் இது. 2013-இல் இதன் ஆங்கில பிரதியும் வெளியிடப்பட்டது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 13-3-2013-இல் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, 19-3-2013-இல் புனித சூசையப்பர் திருவிழா நாளில் திருத்தந்தையாக பொறுப்பேற்றார். அவர்தம் பணியேற்பு விழா உரையில் புனித சூசையப்பரை உதாரணம் காட்டி, "காப்பாளரின் (Protector) அழைப்பு என்பது, மக்களை குறிப்பாக குழந்தைகள், முதியோர், தேவையிலிருப்போர், கடைநிலையோருக்கு அக்கறைமிகு அன்பு காட்டி காப்பது" ஆகும் என்று குறிப்பிட்டார்.

**இன்றைய உலக சூழல்:** இந்நூலின், முதல் அத்தியாயத்திலேயே இன்றைய உலக சூழல் மிகத் தெளிவாக குறிப்பிடப்படுவதை பார்க்கிறோம். "இரக்கம் - இன்றைய உலகுக்கு மிகமிக அவசியத் தேவை. ஆனால் மறக்கப்பட்ட ஒரு தலைப்பு" என்று தலைப்பிடப்பட்டிருக்கிறது: "கடந்து சென்ற இருபதாம் நூற்றாண்டு மிக பயங்கரமான நூற்றாண்டாக இருந்தது; இன்னமும் இளமையாயிருக்கும் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டு, 11-09-2001 அன்று நியூயார்க் உலக வர்த்தக மையத்தில் நிகழ்த்தப்பட்ட மிகக் கடுமையான தீவிரவாத தாக்குதலுடன் தொடங்கியிருக்கிறது என்பதால், இந்த நூற்றாண்டு கடந்த நூற்றாண்டை விட எந்த விதத்திலும் சிறந்ததாக இருக்காது என்பதைத்தான் நமக்கு தெரிவிக்கிறது. இருபதாம் நூற்றாண்டு, மிருகத்தனமான இரு சர்வாதிகார ஆட்சியையும், இரு உலக போர்களையும் கண்டது; இரண்டாம் உலகப் போரில் மட்டும் ஐம்பதிலிருந்து எழுபது மில்லியன் மக்கள் உயிரிழந்தனர்; அத்துடன் அநீதியான கொலைகள், கொத்துக்கொத்தாக மக்கள் கொல்லப்பட்டது, வதை முகாம்கள் ஆகியனவற்றையும் அந்த நூற்றாண்டில் இடம் பெற்றது. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் கண்மூடித்தனமான பயங்கரவாதம், வன்மையான அநீதி, பாலியல் வன்புணர்ச்சி மற்றும் பட்டினியால் சாகும் குழந்தைகள் / சிறார்கள், இலட்சக்கணக்கான மக்கள் உயிருக்கு பயந்து அகதிகளாக ஓடுதல், கிறிஸ்தவர்களை துன்புறுத்துதல் ஆகியவற்றால் திணறும் அதே வேளையில் நிலநடுக்கம், எரிமலை வெடிப்புகள், சுனாமி ஆழிப்பேரலைகளினால் அழிவுகள், பெருவெள்ளம், கடும் வரட்சி ஆகியவற்றினால் பாதிக்கப்படும் உலகை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" - (Mercy - பக்கம் 19).

**யார் காரணம்?:** இத்தனை சீரழிவுகள் இழப்புகள், தாக்கங்கள், தாக்குதல்களுக்கு யார் காரணம்? இவையெல்லாம் நிகழும்போது இறைவன் என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் இவற்றை அனுமதிக்கிறாரா? அல்லது அவரே இவற்றை உருவாக்குகிறாரா? அல்லது கண்டு கொள்ளாமல் அழியட்டும் என்று விட்டுவிடுகிறாரா? இந்த மக்கள், இந்த ஏழைகள், இந்த பாமர மக்கள், இந்த சிறுவர் சிறுமியர் என்ன குற்றம் செய்தார்கள்? இந்த இயற்கை இந்த உலக மக்களுடன் இணக்கமாக இருக்க வேண்டியது ஏன் அழிவு சக்தியாக மாற்றம் பெற்றது? இந்த உலகம் நிலை தடுமாறுகிறதா? இறுதி நாட்கள் நெருங்குகின்றனவா? இப்படி விடைகாண இயலா வினாக்கள் எழுந்து கொண்டிருக்கின்றன.

**இவற்றுக்கு என்ன பதில்?:** இவற்றுக்கெல்லாம் ஒரே பதில்: **மனிதனின் சுயநலம்தான்.** மனிதன் தனக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தையும், படைப்பின்மேல் தனக்கு இறைவன் வழங்கிய உரிமைகளை தனது சுயநலத்திற்காக தவறாக பயன்படுத்தியதுதான். அளவுகடந்த பேராசை, இயற்கை வளங்களைச் சுரண்டுவது, வனங்களை அழிப்பது, ஆற்று மணலை அளவின்றி அள்ளிச் செல்வது, வனங்களில் திரியும் விலங்குகளை அழிப்பது, சுற்றுச்சூழல் கேடுகளை உருவாக்குவது, கணக்கற்ற ஆபத்துமிகு தொழிற்சாலைகளை இயக்குவது, மனிதனை மனிதன் சொந்த லாபத்துக்காக கருவியாகப் பயன்படுத்துவது, அதிகார துஷ்பிரயோகம், வன்முறையை தூண்டுவது, பிரித்து ஆளுவது, கலகம் மூட்டுவது, தனிமனித நியாயமான சுதந்திரம் மற்றும் உரிமைகளில் தலையிடுவது, அநியாய மான முறையற்ற சட்டம் இயற்றுவது, வகுப்புவாதம் வன்முறை தீவிரவாதம் மதவாதம் ஆகியவற்றை ஊக்குவித்து கலவரம் உருவாக்கி அதில் ஆதாயம் தேடுவது - இவைபோன்ற நேர்மையற்ற, அநியாயமான இலக்குகள், செயல்பாடுகளினால் பல சமூக, மத, அரசியல், இயற்கை தீமைகளையும் அழிவுகளையும் மனிதன் உருவாக்கிக் கொண்டான்.

**இதற்கு என்ன தீர்வு?:** 1980-இல் "God in the Dock" (குற்றவாளி கூண்டில் கடவுள்) என்று ஆங்கில குறும்படம் ஒன்று வெளியானது. இதில் பலதரப்பட்ட மக்கள் தங்கள் துன்ப சோக அனுபவம் மற்றும் இழப்புகளுக்கு கடவுள்தான் காரணம் என்று, அவரை கூண்டில் ஏற்றி கேள்வி கேட்டார்கள். கடைசியில் எல்லோரும் சேர்ந்து கடவுளாக கூண்டில் இருந்தவரை அடித்தார்கள். கடவுளோ எல்லோரையும் இரக்கமுடன் அன்பொழுக அரவணைத்து I love you என்று சொல்லிக் கொண்டே அடிகளை வாங்கிக் கொண்டிருந்தார். திருப்பி அடிக்காமல் பாசமுடனும் இரக்கம் பொங்கும் முகத்துடனும் அவர்களை அரவணைத்ததைக் கண்டு, அவர்கள் அமைதியானார்கள். இதற்கெல்லாம் தீர்வு கடவுள்தான். அவரிடம் இருந்து புறப்படும் இரக்கமுடன் இணைந்த அன்புதான். கடவுளின் பிள்ளைகளாக இருக்கும் நாம் இரக்கமுடன் அன்பும் உடையவர்களாய் மாற வேண்டும். ஒவ்வொருவரும் அன்புடன் இரக்கச் செயல்களில் ஈடுபடும் போது இறைவன் விரும்பும் அமைதி உறுதியாக நிலைபெறும். இறைவனின் இரக்கத்தைப் பெற செபிப்போம். ●

**திருஅவையின் வெளிப்படைத் தன்மை எதிர்பார்க்கப் படுகின்றது:** இளையோரிடம் நாம் வெளிப்படைத் தன்மையை எதிர்பார்ப்பதுபோல், சிறார் பாலியல் முறைகேடுகள் குறித்தவற்றில் திருஅவையும் தன் பொறுப்புணர்வுகளை ஏற்று, வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும் என்ற கருத்து, ஆயர் மாமன்றக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக உரைத்தார், அமெரிக்க ஐக்கிய நாட்டு கர்தினால் Blase Joseph Cupich. ஆயர் மாமன்றக் கூட்டத்திற்கென உருவாக்கப்பட்ட Instrumentum Laboris என்ற வழிகாட்டுதல் ஏட்டின் 3ம் பிரிவு குறித்த விவாதங்கள் முடிந்துள்ள நிலையில், சனிக்கிழமை மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றிய சிக்காகோ பேராயர், கர்தினால் Cupich அவர்கள், சிறார் பாலியல் முறைகேடுகள் குறித்து விவாதித்து செயல் முடிவெடுக்க, வரும் பிப்ரவரியில், உலக ஆயர்களின் பிரதிநிதிகள் வத்திக்கானுக்கு வரவிருப்பதையும் எடுத்துரைத்தார். இளையோரின் குரல்களுக்கு இந்த மாமன்றக் கூட்டத்தில் செவிமடுப்பது, பல விடயங்கள் குறித்த உண்மை நிலைகளைத் தெளிவாக்குகிறது என்று கூறிய பாப்புவா நியூ கினி கர்தினால் ஜான் ரிபாட் அவர்கள், புலம் பெயரும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண, ஏழ்மை, வேலை வாய்ப்பற்ற நிலைகள் போன்றவை முதலில் அகற்றப்பட வேண்டும் என உரைத்தார். இதே பத்திரிகையாளர் கூட்டத்தில் உரையாற்றிய சுவிட்சர்லாந்து ஆயர் Alain de Raemy அவர்கள் திருஅவைக்குள் அனைவரும் வரவேற்கப்பட்டவர்களாக உணர வேண்டும், இயேசுவுடன் இணைந்து செல்லும்போது நம் பாதை எப்போதும் இயலக் கூடியதே எனவும் கூறினார். ●

**நாம் ஒவ்வொருவருக்கும் உதவமுடியாது, ஆனால் ஒவ்வொருவரும் யாரோ ஒருவருக்கு உதவ முடியும். - ரோனால்டு ரீகன்.**




ஆண்டின் பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு (4-11-2018) இச.6:2-6; எபி.7:23-28; மாற்கு.12:28ஆ-34

# "நீ என் மீது அன்பு செலுத்துகிறாயா?"

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



**தாம்** மிகவும் மதித்து வந்த சிக்ஸ்துஸ் என்ற திருத்தந்தையை காவலர்கள் பிடித்துக்கொண்டு போவதைப் பார்த்த புனித லாரன்ஸ் அவரைப் பார்த்து, "அன்புத் தந்தையே! என்னை விட்டுவிட்டு நீர் மட்டும் போவது முறையோ? நான் என்ன தவறு செய்தேன்?" என்று கேட்டுப் பெருமூச்சுவிட்டு அழுதார். திருத்தந்தை மறுமொழியாக, "மகனே, துணிவுடன் இரு. மூன்றே நாட்களுக்குப் பின் என்னைப் பின் தொடர்வாய்" என்றார். பிறகு நீதிபதி புனித லாரன்ஸை வரவழைத்து, இவரிடம் இருந்த கோவில் உடைமைகளை மூன்று நாட்களுக்குள் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கட்டளையிட்டான். புனித லாரன்சோ பார்வையற்றோர், காது கேளாதோர், கால் ஊனமுற்றோர், கைவிடப்பட்டோர் மற்றும் ஏழைகளுக்கு கோவில் உடைமைகளைப் பகிர்ந்து அளித்துவிட்டு, அவர்களையே கூட்டமாகச் சேர்த்துக் கொண்டு நீதிபதியை அணுகி, "இதோ! இவர்கள்தான் விலையுயர்ந்த கோவில் உடைமைகள்" என்றார். மன்னன் சினங்கொண்டான். புனிதரை பிடித்து இரும்புக் கட்டிலில் கிடத்தி அதனடியில் நெருப்பு மூட்டும்படி கட்டளையிட்டான். இவரோ சுடர்விட்டு எழுந்து நெருப்பின் கொடுமையைப் பொறுத்துக் கொண்டே மகிழ்ந்த இறைவனைப் புகழ்ந்தார். அப்போது இவரது தலையின்மேல் ஒளிக்கதிர் தோன்ற, அங்கு நின்றோர் அதைக் கண்டு மகிழ்ந்தனர். இறையன்பு இல்லாமல் பிறரன்பு இல்லை. பிறரன்பு இல்லாமல் இறையன்பு இல்லை. நாம் கடவுளோடு கொண்டிருக்கிற ஆழமான அன்பின் செயல்பாடுகள் அடுத்திருப்பவரில் வெளிப்படுத்தப்பட வேண்டும். "உனக்கு அன்பு செய்வது போல உன் அயலானுக்கும் அன்பு செய்" (லேவி.19:18).

**அன்பே வாழ்வின் இலக்கணம்:** இசைக்கு மயங்காதவர்கள் இவ்வுலகில் யாரும் இல்லை. அன்புக்கு அடிமையாகாதவர்கள் இவ்வுலகில் யாரும் இல்லை. அன்பானவர்கள் இவ்வுலகில் இருப்பதால்தான் இவ்வுலகம் நன்றாக இயங்கிக் கொண்டிருக் கிறது. அன்புறவானது முழுமையான இதயத்தோடு, உள்ளத் தோடு, மனத்தோடு அமைய வேண்டும். அன்பும் நட்பும் இருக்கும் இதயமே ஆண்டவர் உறையும் ஆலயம். கிறிஸ்துவத்தின் அடிநாதம் அன்பு. புனித அன்னை தெரசா கூறுவார்கள், "சாவு, இறப்பு என்பது வயது முதிர்ந்தோ, விபத்தினாலோ வருவது அல்ல. ஒருவர் இவ்வுலகில் அன்பு செய்யப்படாமல் இருக்கும் போது அப்பொழுதே அவருக்கு சாவு, இறப்பு ஆரம்பமாகிவிட்டது." கிறிஸ்தவர்கள் என்றால் அன்பானவர்கள் என்று பொருள், ஏனென்றால் கடவுள் அன்பாய் இருக்கிறார். இயேசு மூன்று ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தபோது தந்தை கடவுளை முழுமையாக அன்பு செய்தார். ஏழை - பணக்காரர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், படிக்காதவர் - படித்தவர் என்று எந்த வேறுபாடும் இன்றி அனைவரையும் அன்பு செய்தார். இவ்வாறு இறையன்பு - பிறரன்பு இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை ஒன்றையொன்று பிரிக்க முடியாது.

**இறையன்பு - பிறரன்பு:** "என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகில் உள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்" (மத்.7:21) என்ற இயேசுவின் வார்த்தைகள், "மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ப செயல்களால் காட்டுங்கள்" (லூக்.3:8) என்ற புனித திருமுழுக்கு யோவானின் வாக்குவழி வெளிப்படும் உண்மை, இவை இரண்டும் 'இறையன்பு - பிறரன்பு' க்கு மிகச் சிறந்த உதாரணங்கள். ஒரே கடவுளில் நம்பிக்கை வைக்கிறோம் என்றால் அவரை நம் முழு இதயத்தோகி, முழ ஆன்மாவோடு, முழு ஆற்றலோடு அன்பு செய்ய வேண்டும் என்று இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. ஆயினும் கடவுளை முழுமனதோடு அன்பு செய்கிறோம் என்பதை வெளிப்படக் காட்டுவது நமது பலிமுறைகள், நோன்புகள், செபங்கள் அல்ல, நம்முடைய அன்பு அறச்செயல்களே. எனவே, பிறரைத் தவிர்த்த முறையிலே, பிறரை விலக்கி ஒதுக்கிவிட்ட முறையிலே, நாம் கடவுளை அன்பு செய்ய முடியாது என்பதை உணருவோம் பிறரில் இறைவனைக் கண்டு அவருக்கு பணி புரிவோம். "தம் கண் முன்னேயுள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளை அன்பு செய்ய முடியாது" (1யோவா. 4:20-21).

**அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக:** இன்றைய நற்செய்தியில் மறைநூல் அறிஞருள் ஒருவர் இயேசுவை அணுகி, "அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?" என்று கேட்கிறார். அதற்கு இயேசு இன்றைய முதல் வாசகத்தின் கடைசி இறைவசனத்தை (இச.6:6) மேற்கோள் காட்டுகிறார். இந்த இறைவசனத்தை, நம்முடைய பிற சமய சகோதர சகோதரிகள் தங்கள் வீடுகளில் எவ்வாறு ஒரு எலுமிச்சை பழத்தை தொங்கவிட்டு இருப்பார்களோ, அதே போல் ஒவ்வொரு யூதரும் தங்கள் வீட்டின் கதவு நிலையில் அல்லது உட்புறத்தில் தொங்க விடுவர். இவ்வாறு எல்லா யூதருக்கும் மிகவும் பழக்கமான இறைவார்த்தை அதாவது கடவுளை முழுமையாக அன்பு செய்ய வேண்டும். "உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" என்று இயேசு கூறியது யூதர்களுக்கு முதல் அதிர்ச்சி. இவற்றை விட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை என்று இயேசு மீண்டும் கூறியது அவர்களுக்கு இரண்டாவது அதிர்ச்சி. ஏனென்றால் யூதர்கள் கடவுளை மட்டும் அன்பு செய்தால் போதும் மற்ற மனிதர்களை (அடுத்திருப்பவர்களை) பற்றி கவலை இல்லை என்ற எண்ணத்தில் வாழ்ந்தார்கள்.

**எரிபலி மற்ற பலிகளிலும் மேலானவை:** எருசலேம் பேராலயத்தில் வழிபாடுகள் நடைபெற்றன. தானியங்கள் காணிக்கையாக்கப் பட்டன. ஆடு, மாடுகள் பலிபொருளாக்கப்பட்டன. ஆனால் இவை பொருளற்ற சடங்குகளாக மாறியதை இறைவாக்கினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். "உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கிறேன்; உங்கள் வழிபாட்டு கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை" (ஆமோ.5:21-24). இறைபுகழ் பாடுதல், பலி செலுத்துதல், சட்டங்களைக் கடைபிடித்தல் போன்றவை வெறும் சடங்காக, கடமையைக் கழிக்கும் சம்பரதாயமாக மாறிவிடக் கூடாது. அனைத்திற்கும் மெருகூட்டுவது இறையன்பும், பிறரன்பும். நமது வாழ்வின் அனைத்து செயலிலும் இவ்விரு பண்புகள் வெளிப்பட வேண்டும். எனவேதான் புனித அகுஸ்தினார், "இறைவனை முழு அன்பு செய்; பின் உன் விருப்பம் போல் நடந்துகொள்" என்றார்.

**நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?:** இயேசு சீமோன் பேதுருவிடம், "யோவானின் மகன் சீமோனே! நீ என் மீது அன்பு செலுத்துகிறாயா?" (யோவான்.21:16) என்று மூன்று முறை கேட்டார். இறுதியில் இயேசு பேதுருவிடம், "என் ஆடுகளைப் பேணி வளர்" என்றார். இதன் பொருள் இதோ! எனக்கு பின் நீர் இந்த மக்களை வழிநடத்த போகிறவர். எனவே, இவர்களை முழுமையாக அன்பு செய்து கண்காணித்துக் கொள். இன்றைய திருப்பலி வழியாக நம் ஒவ்வொருவரையும் பார்த்து நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கேட்கின்றார். "மகனே! மகளே! நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?" உன் பெற்றோரை அன்பு செய், உன் பிள்ளைகளை அன்பு செய், உடன் பிறந்தவர்களை, உறவினர் களை, நண்பர்களை, உன் அடுத்திருக்கும் அனைவரையும் அன்பு செய் என்கிறார். "நீ எனக்கு அன்பு செய்வது போல் பிறரையும் அன்பு செய்" (மத்.25:31-46) என்று பொதுத் தீர்வை பற்றிய உவமையிலும் இயேசு கூறியுள்ளார். எனவே கடவுளை முழுமையாக அன்பு செய்வோம். பிறரை நிறைவாக அன்பு செய்வோம், இறைவனின் ஆசீரை பெற்று மகிழ்வோம். ●

நாம் பல தோல்விகளை எதிர்கொள்ள முடியும், ஆனால் நாம் தோற்றுவிடக்கூடாது. - மாயா ஏஞ்சலூ.



# அதிகாரம் எங்கிருந்து வருகிறது? 5

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

சென்ற இதழ் தொடர்ச்சி...

**5. அர்ப்பணிப்பும் ஆர்வமும்:** முழுமையான அர்ப்பணம் (commitment) இல்லாத உறுப்பினர்களைக் கொண்டு எந்தச் சிறந்த தலைவராலும் ஒன்றும் சாதிக்க முடியாது. இவை இரண்டையும் உறுப்பினர்களுக்கு எப்படி அளிப்பது? கருத்தரங்குகள் நடத்தியா? சிறந்த தியானம் கொடுத்தா? குழு விவாதம் வைத்தா? இவை மட்டும் போதாது. அனைவருடைய கண்களும் உற்று நோக்குவது தங்களுடைய தலைவரையே. அவர் எது எதையெல்லாம் தியாகம் செய்து தன் அர்ப்பணத்தை வாழ்கிறார்? அவருடைய பணி ஆர்வம் பற்றியெரிந்து தன்னைப் பின்பற்றுபவர்களையும் எரிக்கிறதா? அவர்களால்தான் சபையில் சிறந்த பணியை ஆற்ற முடியும். தலைவர்களிடம் முழுமையான அர்ப்பணமும் ஆர்வமும் இல்லை என்று கண்டால் நிறுவனத்தின் மீது உறுப்பினர் களுக்குப் பற்றின்மை தோன்றிவிடும். தலைவர்கள் சிரமப்பட்டு இலக்கை நோக்கிச் செல்ல உறுப்பினர்களைத் தூண்ட வேண்டி வரும்.

**6. நன்கு தொடர்பு கொள்ளத் தெரிந்தவர்:**(Good communicator) தலைவர்கள் தங்கள் இலக்கைத் தெளிவாகத் தன் குழுவுக்குத் தெரிவிக்கவும் அதைச் செயல்படுத்தும் வழிமுறைகளை எடுத்துக் கூறவும் அறிந்திருக்க வேண்டும். இல்லையெனில் நல்ல பயனைக் காண்பது கடினம். ஒரு தலைவர் தன் கருத்தைத் தன் குழுவுக்கு பலனளிக்கும் விதத்தில் எடுத்துக் கூற முடியவில்லையென்றால் அவரால் ஒருபோதும் சிறந்த தலைவராக இருக்க முடியாது. நன்றாகக் கருத்துக்களை வெளிப்படுத்துபவர் ஒரு நல்ல தலைவராக முடியும். ஒருவரை நன்கு தூண்டுவதற்கு வார்த்தைகளுக்கு ஆற்றல் உண்டு. வார்த்தைகளைப் பயனளிக்கும் விதத்தில் கையாண்டால் சிறந்த வெற்றி கிடைக்கும்.

**1. முடிவெடுக்கும் திறன்:** எதிர்காலப் பார்வையே அன்றி ஒரு தலைவருக்குச் சரியான முடிவெடுக்கத் தெரிய வேண்டும். தலைவர்களால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு மக்கள் மீது ஆழ்ந்த தாக்கம் உண்டு. ஒரு தலைவர் முடிவெடுக்கும் முன் அதிகம் சிந்திக்க வேண்டும், கடினமாகச் சிந்திக்க வேண்டும், அதிகம் செபிக்க வேண்டும். அனுபவம் உள்ளவர் களோடு கலந்தாலோசிக்க வேண்டும். தன்னுடைய சிந்தனையில் கண்டவற்றை முடிவெடுக்க உரிமையுள்ள ஆலோசனைக் குழுவுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். மேலும் உறுப்பினர் அனைவருடைய கருத்துக்களையும் அறிய ஒரு சில உத்திகளைப் பயன்படுத்தலாம். உதாரணமாக ஆலோசனைக் குழுவில் ஆராயவிருக்கும் தலைப்புகளை முன் கூட்டியே அனைவருக்கும் தெரிவித்து அவர்களுடைய கருத்துகளைச் சுதந்திரமாக அளிக்க வகை செய்ய வேண்டும். மேலும் அனைத்தையும் தன்னிடமே கூற வேண்டும் என்று தலைவர் எதிர்பார்க்காமல் ஆலோசகர்களிடமும் கூற வழி செய்ய வேண்டும்.

ஒருமுறை முடிவெடுத்தபின் அதில் உறுதியாக நிற்க வேண்டும். தலைவர்கள் தனித்துச் சிந்தித்து அதையே ஆலோசனை என்ற பெயரில் மற்றவர்கள் மீது திணிப்பதும் உண்டு. சொந்த கருத்தை ஆலோசனையின் இறுதியில் வெளியிடுவது மேற்கூறிய தவறைத் தவிர்க்க உதவும்.

**2. கணக்குக் கொடுத்தல்:** கணக்குக் கொடுத்தலை மிக மகிழ்ச்சியான ஒரு செயலாகப் பார்க்க வேண்டும். ஏனெனில் தனது நேர்மையை வெளிப்படுத்த அது ஓர் அரிய வாய்ப்பு. அதுவே தன்னோடு பணி புரியும் அனைவரிடமும் கணக்குக் கேட்க அதிகாரம் கொடுக்கிறது. அவர்கள் முறையாகக் கணக்குக் கொடுக்க ஒரு வழிமுறையை ஏற்படுத்த வேண்டும். திடீரென ஒருவரிடம் கணக்குக் கேட்டால் அவர்



தன்னைச் சந்தேகிப்பதாக நினைக்க நேரும். கணக்குக் கேட்கும் வழக்கம் மற்றவர்களைப் பொறுப்புள்ளவர்களாக்கும்.

தாலந்து உவமையில் இயேசு கொடுத்த தாலந்துகளுக்குக் கணக்குக் கேட்கிறார். தாலந்து என்றால் ஆடும் திறன், பாடும் திறன், எழுதும் திறன் என்றில்லை. இவை எல்லோருக் கும் கிடைக்கக் கூடும். ஆனால் இயேசு இவற்றை நமக்களிக்கச் சிலுவையில் உயிர்விடவில்லை. ஆனால் மன்னிக்க, பகைவர்களை அன்பு செய்ய, பரிவுகாட்ட, பெருந்தன்மையோடு நடக்க, இப்படி நற்செய்தி கூறும் போதனைகளைக் கடைபிடிக்கத் தாலந்து கொடுத்தார்.

கொடுத்த பணியைச் செய்து முடித்த நல்ல பணியாளரை **“நன்று நன்று நல்ல ஊழியரே!”** என்று பாராட்டியிருக்கிறார். நல்லதைப் பாராட்டுதல் ஒரு நல்ல தலைவருக்கு இருக்க வேண்டிய ஒரு அவசியமான பண்பு.

**3.பிரதிநிதிகளை நியமித்தலும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளலும்:** எந்தத் தலைவரும் தாமாகவே எல்லாவற்றையும் தனித்துச் செய்ய முடியாது. செய்வதைச் சரியாகச் செய்யவும் முடியாது. ஒரு தலைவர் தன் கவனத்தை முக்கிய பணிகளில் செலுத்த வேண்டும். மற்றதைப் பிறருக்கு விட்டுவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் தங்களுடைய உடன் பணியாளர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். எல்லாவற்றையும் தலைவர்களே செய்வார்களானால் அது மற்றவர்களை நம்பவில்லை என்றும் ஆகிவிடும். மேலும் தலைவரால் முக்கியமானவற்றில் கவனம் செலுத்த முடியாது. அதிகாரத்தைப் பகிர்ந்துகொடுத்தால் போதாது அவர்களுக்குப் பக்க துணையாகவும் இருக்க வேண்டும். அவர்கள் செய்யும் தவறுகளில் அவர்களைப் புரிந்துகொண்டு பிறர் முன்னால் விட்டுக்கொடுத்தல் கூடாது.

**4. படைத்தலும் புதுப்பித்தலும்:** ஒரு தலைவரை அவரைப் பின்பற்றுபவர்களில் இருந்து பிரித்துக் காட்டுவது படைத்தலும் புதுப்பித்தலுமே. ஒரு நிறுவனம் வளர்ச்சி அடைய, இருப்பதைக் கட்டிக் காப்பதோடு புதியனவற்றைப் படைக்க வேண்டும். பழமையானவற்றைப் புதுப்பிக்க வேண்டும். இன்றைய உலகம் மிக வேகமாக மாறிக்கொண்டு வருகிறது. எனவே இவை இரண்டும் அவசியமாகின்றன. **ஆவியானவர் பூவுலகின் முகத்தைப் புதுப்பிக்கிறார்** என விவிலியம் கூறுகிறது. இல்லையெனில் ஒரு நிறுவனம் அல்லது ஒரு சபை தேக்க நிலையில் இருந்துவிடும். தேங்கிய நீர் கிருமிகளின் பிறப்பிடம் என நாம் அறிவோம்.

படைப்பாற்றல் உள்ள சிந்தனை ஒரு தலைவருக்கு அவசியம். அது தலைவருடைய உறுப்பினர்களைத் தலைவரிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டும். - தொடரும்

## வாசகர் குரல்:

பேரன்புள்ள ஆசிரிய அருட்தந்தை அவர்கட்கு வணக்கம். 7-10-2018 தேதியிட்ட “வியாபியில்” தந்தை ஜெயபாலன் அவர்கள் எழுதியுள்ள “முழுத் திருப்பலி எது?” காலத்தின் கட்டாயமே! யாரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய மொழி நடையில் இக்கவிதை சொல்லும் செய்தி ஒவ்வொரு கத்தோலிக்கரின் மனதில் பதிய வேண்டும். திருப்பலிக் கொண்டாட்டம் என்பது வெறும் கடமைக்கான அனிச்சைச் செயல் அன்று. உணர்ந்து, ஆவியோடும் உண்மையோடும் நிறைந்து தூய உள்ளத்தோடு ஏறெடுக்கப்படும் அன்பின் நன்றி பலி! வெற்றுச் சடங்கல்ல! திருப்பலியின் தொடக்கத்தில் பொதுப் பாவ மன்னிப்பு கடவுளின் பெயரால் வழங்குவது அற்பப் பாவங்களுக்கு மட்டுமே! சாவானப் பாவங்களுக்கு ஒப்புரவு அருட்சாதனம் மட்டுமே முழுத் தீர்வு என்பதை நாம் அறிய வேண்டும். எனவே, பவுலடியார் 1கொரி.11:23-30இல் அறிவுறுத்துவதை தியானித்து வாழ்ந்துகாட்டினால் திருப்பலி உயிருள்ள பலியாக இம்மையிலும் மறுமையிலும் நிறை வாழ்வைத் தரும். தந்தை அவர்கட்கு ஜெப நிறை வாழ்த்துக்கள்.

- **ச. செல்வராஜ்,** விழுப்புரம்.

**முயற்சியை முன்னெடுப்பவருக்கு முடியாதது ஏதுமில்லை - மாவீரன் அலெக்ஸாண்டர்.**



# மறைமாநில மாமன்றம் மலர்க பங்கேற்பாளர்கள்

– சுவாமி ஆ. லூயிஸ்.

**நூ**ற்றி எழுபத்தைந்து ஆண்டுகட்குப்பின் ஜூபிலி நினைவாக, இன்றைய தேவைகளுக்காகவும், நாளைய நோக்கத்துடன், நமது முதன்மை மறைமாவட்டத்தில் நாம் மேற்கொள்ளப் போகும் தயாரிப்புகள், திட்டங்கள், செயல் பாடுகள் எல்லாமே மிகச் சிறந்த முறையில் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரையும் ஈடுபடுத்தி, கலந்துரையாடி, செபித்து, மிகச் சிறந்த முறையில் மேற் கொள்வது எவ்வளவு நல்லது என்று எல்லாரும் உணரு வோம், உடன்படுவோம், ஒத்துழைப்போம், பேரவைக்குரிய தனி செபத்தை வீட்டிலும் கோவில்களிலும், குழுக்களிலும், தனியாகவும் செபித்து ஆவியின் தூண்டுதலையும், ஏவுதலையும், ஆதரவையும் பெறுவோம்.

**படி நிலைப் பங்கேற்பு:** மாமன்றத்தின் கொண்டாட்டங் களை மறைமாநிலம் முழுவதும் பகிர்ந்து கொள்ள, விழிப்புணர்வின் அலைகள் அனைவரையும் அடைய பல்வேறு அணுகுமுறைகளை நாம் கடைபிடிக்க வழிவகைகள் உண்டு. தலத்திருச்சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் மாமன்ற செபத்தின் வழியாக, பொதுவாக நமது வார இதழ் சர்வவியாபி வழியாக, அவ்வப் போது வரும் சுற்றுமடல்கள் வழியாக பகிர்ந்துகொள்ள ஆர்வத்தை வழிகாட்டிகள் முதல் முயற்சிகளை மேற்கொள்ள இயலும். அன்பியக் கூட்டங்கள், பங்கின் பக்த சபைகள், பங்குப் பேரவை இவைகளில் மாமன்றத்தைப் பற்றி கலந்துரையாடலாம், தூண்டுதல் பெறலாம். கிளைப் பங்குகளிலும் இத்தகைய வழிமுறைகளை கடைபிடிக் கலாம். மறைமாவட்ட குழுக்களிலும் விழிப்புணர்வை விரிவாக்கலாம். நிறைவாக தொடர் மறைமாவட்ட கூட்டங்கள் வழியாக விழிப்புணர்வை வளர்க்கலாம். இவ்வாறு மக்கள் மத்தியில் ஆர்வத்தைத் தூண்டுவது பயன்மிக்கது.

**பொறுப்பாளர்கள்:** தலத்திருச்சபையின் அடிப்படையான அமைப்புகள், பங்கு, மறைவட்டம், மறைமாநிலம் என்பதில் தெளிவும், உறுதிப்பாடும், தொடர்பும் இடம் பெறுவது இயல்பு. பங்கு குழு, மறைவட்ட முதல்வர், மரைமாவட்ட மேய்ப்புப் பணி ஒருங்கிணைப்பாளர் என சட்டப்பூர்வமாக நியமிக்கப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கின்றனர். இவர்கள் தங்கள் பொறுப்புகளை விழிப்புணர்வோடு தினம், வாரா வாரம், மாதா மாதம், ஆண்டு அளவில் மேற்கொள்ள வேண்டும். கலந்துரையாடி, மதிப்பீடு செய்து, குழுக்களைக் கட்டி எழுப்பி தலத்திருச்சபையை ஆற்றல் மிகுந்த நம்பிக்கையின் குழுக்களைக் கண்டு மகிழ்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பது எவ்வளவோ மேலானது என்று அனைவரும் பங்கேற்போம்.

இன்று பொதுவாக பரவலாக பலர் பொறுப்புகளைத் தேடுகிறார்கள். ஆனால் ஊழியன் என்ற உணர்வை மேற்கொள்ளாது சகலகலா வல்லவனாக, வல்லவளாகத் தான் பெருமையோடு முன்னணியில் நிற்க முயல்கின்றனர். இத்தகைய போக்கிற்கு திருச்சபையில் யாருக்கும் பாராட்டு கிடையாது. கடையவனாய் இருப்பவர்தான் உங்களுக்குள் பெரியவர் என்பதை யாரும், எப்போதும் மறந்து விடக்கூடாது, சோதனையில் இருந்து நாம் நம்மையும் மற்றவர்களையும் இயேசுவைப் போல செம்மைப்படுத்துவது நல்லது.

**ஆண்-பெண் சமம்:** எல்லார்க்கும் முன்னோடியாய் இருக்கும் திருச்சபை அமைப்புகளில் ஆண்-பெண் சம எண்ணிக்கையில் இருப்பதே மிகவும் ஏற்புடையது என்பதை இனியாவது நிறைவேற்ற அனைவரும் முயற்சியெடுப்பது, செயல்படுத்துவது போர்க்கால நடவடிக்கையாக இடம் பெற வேண்டும் என்பதை அனைவரும் தீவிரமாக செயல் படுத்துவது காலத்தின் கட்டாயமாகிறது. ஏட்டில் இருப்பது நாட்டிலும், வீட்டிலும் செயல்பாட்டிற்கு வர தீர்மானித்து உடனடியாக செயல்படுத்துவோம். இன்னும் ஆண்மையின் ஆதிக்கத்தை ஆணோ, பெண்ணோ அனுமதிக்க இடமில்லை. சமப்பங்கேற்பு இல்லை என்றால் உள்ளிருப்பு சத்தியாகிரகம் இடம்பெறும் என்று அறிக்கையிடுவோம், சாத்வீக முறையில் போராடி உரிமைகளைப் பெற்று கடமைகளை சிரமேற் கொள்வோம்.

இதை நமது குடும்பங்கள், குழுக்கள், பக்த சபையில், பேரவையில், முடிவெடுக்கும் அமர்வுகள் அனைத்திலும் செயல்படுத்துவோம். இதுவே கடவுளின் திருவுளம் என்பதை உறுதிச் செய்வோம். இதுவே கடவுளின் திட்டம் என்பதில் நமக்குள்ளும், நாட்டிலும் சான்று பகர்வோம். இவ்வாறு தான் இறையாட்சியின் விழுமியங்களைக் கடைபிடித்து இறை யாட்சியைக் கட்டி எழுப்புவோம். உறவுக்குக்கரம், உரிமைக்குக் குரல் கொடுப்போம். இத்தகையப் புரட்சி யைத் தான் இயேசு ஆரம்பித்து வைத்தார், தொடர்ந்து துணை செய்வார், நாமும் தொடர்வோம்.

**பங்கேற்பு:** பங்கேற்பு என்பது தொடக்கத்திலிருந்து கடைபிடிக்கப்பட்டு வந்தது, இடையில் அதிகார துஷ்பிர யோகம் இடம் பெற்றதால் ஆதிக்கம் அதிகமானது, உயர்வு தாழ்வு மேலோங்கியது, பாரபட்சம் பரவலானது, பிளவுகள் பெருகின, வலிமைக் குன்றியது. ஆனால் மூவொரு கடவுள் பங்கேற்பு என்ற அகப்பண்பை புறத்திலும் சுதந்திரத்தோடு கடைபிடிக்க கரம் கொடுப்பார் என்பது உறுதி. பங்கேற்காத ஆளும் அமைப்புகளும், குழுவும் சபைகளும் சிதறிப் போகும். நல்லாயனான இயேசு ஒருமைப்படுத்த, தோழ மையை வளர்க்க தன்னை முழுவதும் அர்ப்பணித்து வருகிறார்.

நமது வீட்டில் அம்மா இல்லையேல் வீடும், வீட்டில் இருப்பவர்களும் சிதறிவிடுவர். அதைப் போலவே நமது அன்னை மரியாள் இல்லை என்றால் திருச்சபை பிளவுபட்டுவிடும். இன்றைய பிளவுகளை அன்னை மரியாள் தோழமைக்கு அழைத்துக் கொண்டே இருக்கிறார். தாய்ச் சொல்லைத் தட்டாமல் கேட்போம். எங்கும் ஒருமைப் பாட்டை வளர்க்க இயேசுவோடு இணைந்து எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக என்று மன்றாடுவோம், அவர் நம்மை கைவிடமாட்டார், அவரின் வெற்றி நமது மகிழ்வாகட்டும். ●

---

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :**

**2018-2019** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

---

**திருத்தந்தையின் டுவிட்டர் :**

“நம்மை பாவத்தில் விழச்செய்யும் சாத்தானை அடையாளம் கண்டு அதனால் நாம் வெட்கமடைவது மோசமா, அல்லது மிக நாகரீகமாகத் தோன்றி நமக்குள் புகுந்து, நம்மை உலகப் போக்கில் அமிழ்த்திவிடும்.சாத்தானை அனுமதிப்பது மோசமா? எது உண்மையிலேயே மோசமானது.”



# பலியிடும் குருக்களும் பலியிடப்படும் பொதுநிலையினரும்

சிந்தனைச் செல்வர், பேராசிரியர் அ.குழந்தைராஜ்-காரைக்குடி

ஒரு பங்கில் ஒரு பங்குக்குருவானவர் பணி இடம் மாற்றிச் சென்றபோது அவரது உடைமைகளை, துணி, புத்தகங்கள், சொந்த உபயோகப் பொருட்கள் எல்லாவற்றையும் ஒரு லாரியில் ஏற்றி வைத்தார்கள் அங்கு உள்ள இறைமக்கள். சாமியார் கேட்டார் "ஏம்ப்பா எல்லா சாமான்களையும் மறந்துவிடாமல் லாரியில் ஏத்திட்டிங்களா?" என்றார். பலர் கூறினார்கள். "ஆமா சாமி, எல்லாவற்றையும் மறக்காமல் ஏத்திட்டோம்" என்றார்கள். ஆனால் அங்கிருந்தவர்களுள் ஒருவர் மட்டும் கூறினார். "சாமி நீங்க எல்லாச் சாமான்களையும் எடுத்து வைச்சிட்டீங்க ஆனா ஒன்றை மட்டும் நீங்கள் இங்கே விட்டுவிட்டுப் போகிறீர்கள். அதை உங்களால் எடுத்துக் கொண்டும் போகமுடியாது" என்றார். சாமியார் கேட்டார், அதென்னப்பா நான் எடுத்துக்கிட்டுப் போக முடியாத பொருள் என்று வினவினார். அவர் கூறினார் சாமி இங்கிருந்து எடுக்க முடிந்த பொருளையெல்லாம் எடுத்து வைக்கச் சொன்னீங்க; ஆனால் நீங்கள் எடுக்க முடியாத பல காரியங்கள் இங்கே இருக்கின்றன என்றார். அதென்னப்பா என்றார் குரு. "நீங்கள் எங்கள் மீது காட்டிய அன்பு, கடவுள்மீது எங்களுக்கு நீங்கள் கற்றுக்கொடுத்த விசுவாசம், எங்களுக்குள்ளாக நீங்கள் ஏற்படுத்திய நட்புறவு, பிறரன்புப் பணிகள், இன்முகம், விருந்தோம்பலை எல்லாம் நாங்கள் மறக்க முடியுமா. நீங்கள் எங்களிடமிருந்து இவைகளை எடுத்துத்தான் செல்லமுடியுமா" என்றார். சாமியார் கண்கலங்கி நின்றார்.

குருக்களின் வாழ்க்கை தூரத்து பச்சையாக இருக்கலாம். அது முள்ளின் மீதுள்ள படுக்கை, தியாகங்களின் உறைவிடம், அவர்களின் வாழ்க்கையை நாம் தொலைவில் கண்டு பொறாமைப் படுகிறோம். அவர்களின் தனிவாழ்வு கடவுளை மட்டுமே சார்ந்திருக்கும் வாழ்க்கை, எந்தக் குறிப்பிட்ட நபரும் உறவல்ல. ஆனால் எல்லாருமே உறவுக்காரர்களாக அணைக்கும் பாங்கு, நம் பாவங்களையெல்லாம் கேட்டு சகித்து நமக்காக மன்றாடும் ஒரு தியாக தீபம், எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு நாளும் பிரசவ வேதனையோடு இயேசுவைப் பெற்றுக்கொடுக்கும் புண்ணிய வான்கள். அன்று மரியாள் உலகிற்கு ஈந்தது ஒரு இயேசு. ஆனால் இன்று உலகின் எல்லாக்காலங்களிலும் 24 மணி நேரத்திலும் எங்காவது ஒரு மூலையில் திருப்பலி நேரத்தில் வசீகர வார்த்தைகளைச் சொல்ல சாதாரண அப்பத்தை இயேசுவினுடைய உடலாக" பெற்றுத் தருகிறார்களே அவர்களின் பணியை என்னவென்று வருணிப்பது.

ஆனால் பொதுநிலையினரின் பணிகளும் இதற்குச் சமமானதே. ஏனெனில், தான் வாழும் உலகில் பல்வேறு, சமய, மொழி, கலாச்சார, இன, பண்பாட்டு மக்களிடையே ஊடுருவி தங்களை பலியிடப்பட்ட கிறிஸ்துவாக வாழ்ந்து காண்பிக்கும் அவர்களின் பணிகளும் சாதாரணமானதல்ல, CROSS is nothing but crossing the I என்பார்கள். "**I**" என்ற நான் என்னும் அகந்தையை, குறுக்குகோடு போட்டு அகற்றுவதுதான் சிலுவை அடையாளம். எந்தச் சூழலிலும் தன்னைப் பின்தள்ளி இயேசுவை முன்னிருத்துகிறோமோ அப்பொழுது மகிழ்ச்சி யுண்டு. J=Jesus First O=others second = Y = Yourself third என வாழ்ந்தால் **Joy** கிடைக்கும். ஆனால் இன்று நடப்பதென்ன? நம்மை மெழுகுதிரிகளாகக் கரைத்து ஒளிவீசும் நாம், தன்னையே எரித்து பிறருக்கு நறுமணப்புகை தரும் ஊதுபத்தியாய் பொருளுக்குச் சுவையும், பாதுகாக்கும் தன்மையுடைய உப்பாய் நம் நாட்டில் ஏறத்தாழ 2000 ஆண்டுகளாக, இன்னும் சிறப்பாக கடந்த 400 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறோம். நம்மவர்களின் பணி கணக்கிலடங்காதது. இறையன்பு,பிறரன்பு, இயற்கைமீது அன்பு என்று தியாக தீபங்களாய் நாம் வாழ்ந்து வருகிறோம்.

இந்தியாவில் வாழும் நமது கத்தோலிக்கர்கள் இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான சனாதன தர்மம், பௌத்தம்,சீக்கியம், இசுலாமிய நண்பர்களுக்கு நேசக்கரம் நீட்டி, இறைவனின் அன்பை அவர்கள் சுவைக்க, அனுபவிக்க பல்லாண்டு வாழ, நாம் இயேசுவின் அன்பை அளிக்க ஏற்படுத்தியுள்ள நிறுவனங்கள் தான் எத்துனை? 1) மழலையர் பள்ளிகள் 3785 2) துவக்கப்பள்ளிகள் 7319 3) கல்லூரிகள் 2409 4) தொழிற்பயிற்சிக் கூடங்கள் 1514. 5) மாணவர் விடுதிகள் 1765. 6) மருத்துவமனைகள் 704. 7) தொழுநோயாளிகள் காப்பகம் 111. 8) மறுவாழ்வு மையங்கள் 102. 9) முதியோர் மற்றும் ஊனமுற்றோர் இல்லங்கள் 455. 10) குழந்தைகள் காப்பகம் 228. 11) அநாதை இல்லங்கள் 1085. 12) மருந்தகங்கள் 1792. இத்துனை நிறுவனங்கள் நமது இந்திய மக்களுக்கு தன்னலமில்லாச் சேவை செய்கிறபொழுது, ஏணிமேல் ஏறியவன், மேல்மாடிக்கு சென்றபின் ஏணியை உதைத்துத் தள்ளுவது அறிவீனம். அன்னை தெரசாள் கூறினார் "உன் எண்ணங்களை வடிவமைத்து, நற்பணி ஆற்றிடும் போது அதை இடிக்கப் பலர் வருவார்கள். ஆயினும் நீ கட்டிக் கொண்டேயிரு" என்பார். அதைப்போல நம் பணிகளை ஆயிரம் பேர் குறை கூறிடினும் நாம் நிலைகுலையமாட்டோம். "நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும், மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப் பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை (2கொரி.4:8-9). ஏனெனில் பொதுநிலையினராகிய நமக்கு பல்லாயிரக்கணக்கான "வேலைக்காரத் தேனீக்கள் ஒரு ராணி தேனீயைக் காப்பாற்றுவது போல இயேசுவின் இறையரசை நமக்குக் கட்டத்தான் தெரியும். எத்துனை சக்திகள் நம்மை எதிர்த்தாலும் நெகேமியா போன்று இடிந்த மதிலை உடனே கட்டுவோம். Each one, Catchone Teach one, Preach one அடுத்த ஆண்டே நாம் இரட்டிப்பாவோம். இயேசுவின் இரண்டாம் வருகையை விரைவுபடுத்துவோம். ●

99 இளம் உள்ளங்களுக்கு

# அன்பே கடவுள்



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**பயணம்:** ஒருவர் தொழில் நிமித்தம் பிரான்ஸ் செல்ல வேண்டியிருந்தது. விமான நிலையம் வரை அவர் அன்பு மனைவி வந்திருந்தார். விமான நிலையத்தில் தன் மனைவியிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு விமானத்தில் பயணம் ஆனார். அவர் சென்ற காரியம் முடிய பத்து நாட்கள் ஆயிற்று. எனவே, மீண்டும் தன் சொந்த நாடு திரும்ப எண்ணினார். அதற்கான பயணச் சீட்டையும் வாங்கிக்கொண்டார்.

**தந்தி அலுவலகத்தில்:** தான் தாயகம் திரும்புவதை தந்தி மூலம் மனைவிக்கு தெரிவிக்க விரும்பி தந்தி அலுவலகம் சென்றார். அங்கே அலுவலக பெண்மணி அவருக்கு ஒரு படிவத்தை கொடுத்து நிரப்ப சொன்னார். இவர் தான் நாடு திரும்புவது பற்றிய விபரங்களை சுருக்கமாக எழுதிவிட்டு, அலுவலக பெண்மணியிடம் இந்த தந்தியை அனுப்ப எவ்வளவு ஆகும் என்று கேட்டார். அந்த பெண்மணியும் அதற்கான தொகையை தெரிவித்தார். உடனே அவர் தன்னிட மிருந்த பிரஞ்சு நாணயத்தை எண்ணிப் பார்த்தார். அது தேவைக்கு கொஞ்சம் குறைவாக இருந்தது.

**அன்பு வேண்டாம்:** உடனே அவர் அந்த பெண்மணியிடம், அந்த தந்தியிலிருந்து 'அன்புடன்' என்ற வார்த்தையை நீக்கி விடச் சொன்னார். அந்த வார்த்தையை நீக்கிவிட்டால் தந்தி அனுப்ப போதுமான பணம் தன்னிடம் இருக்கும் என்றார். உடனே அந்த பெண்மணி '**அன்புடன்**' என்ற வார்த்தையை நீக்க முடியாது என்று சொல்லிவிட்டு அவசரமாக தன் கை பையை திறந்து 'அன்புடன்' என்ற வார்த்தயை சேர்க்க போதுமான பணத்தை எடுத்துக் கொண்டு, இதற்கான பணத்தை நான் செலுத்திவிடுகிறேன் என்றார். மேலும், எந்த மனைவியும் 'அன்புடன்' என்ற அந்த வார்த்தையை தன் கணவனிடமிருந்து பெற மிகவும் விரும்புவார் என்றார்.

**சிந்திக்க:** பிறருக்கு நாம் உதவும்போது, வெறும் கடமைக்காக என்றில்லாமல், அன்பை செயல்வடிவில் காட்டினால், பெறுபவர் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவார். அப்போது கொடுப்பதிலும் இன்பம், பெறுவதிலும் இன்பம் இருப்பதை உணர முடியும். கடவுளும் நம்மிடம் அன்பைதான் எதிர்பார்க்கிறார். நம் கடவுள் அன்புக்காக ஏங்கும் தெய்வம். நம் அயலாரை நாம் அன்பு செய்யும் போதெல்லாம் கடவுளையே அன்பு செய்கிறோம். ஏனெனில் கடவுள் அன்புள்ளவராக இருக்கிறார். God is Love.●



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



**20ஆம் படலம்**

ஆண்டவர் மோசேயை நோக்கி, எகிப்து நாடெங்கும் – எகிப்து நாட்டிலுள்ள மனிதர், விலங்கு, வயல் வெளியிலுள்ள பயிர் பச்சை இவற்றின்மேல் – கல்மழை பொழியுமாறு உன் கையை வான்நோக்கி நீட்டு என்றார். மோசே தம் கோலை வானோக்கி நீட்டவே, ஆண்டவர் இடிமுழக்கங்களையும், கல்மழையையும் அனுப்பினார். நிலத்தில் நெருப்புப் பாய்ந்து வந்தது. எகிப்து நாடெங்கும் கல்மழை பெய்வித்தார் ஆண்டவர். கல்மழை பெய்தது – விப.9:22–24.

காப்பியப் பாடல் 1019

**65 விப.9:33. மோசே “... தம் கைகளை ஆண்டவர்பால் நீட்டினார். உடனே இடிமுழக்கங்களும் கல்மழையும் ஓய்ந்தன. நாட்டில் மழை பெய்வதும் நின்றது.”**

நுண்ணுணர்வுப் பார்வையிலே விண்ணை நோக்கி
நோவகல ஆண்டவரை வணங்கிப் பார்த்து,
‘மண்ணகத்து எகிப்தியரை வதைக்க வந்த
மாதுயரக் கல்மழையும் கடந்தே போக
அண்ணலேநீர் அருள்புரிவீர்’ என்றே மோசே
ஆர்த்தொலித்து, ஆண்டவர்பால் கைகள் தம்மை
திண்ணியராய் மேல்நோக்கி நீட்டக் கண்ட
திசையனைத்தும் விளித்தவரைப் போற்றி றம்மா!

காப்பியப் பாடல் 1020

**66 ‘இறைவனிடம் கையேந்துங்கள் அவர் இல்லை என்று சொல்லவே மாட்டார்’ என்பது எல்லாச் சமயத்தாரும் அறிந்த உண்மையே. விண்ணகத் தந்தையிடம் கையேந்திக் கேட்டால், அவர் கேட்பதைப் புதுமையாகத் தராமல் முகத்தைத் திருப்பியா கொள்வார்?**

மண்ணிருந்து விண்ணோக்கும் மாந்தர் தம்முள்
மதித்திறையாம் தந்தையிடம் கைவி ரித்தே
எண்ணியதம் வேண்டுதலை ஏற்றுக் கொண்டே
இவ்வுலகக் கவலைகளில் இருந்தே காக்க
புண்ணியரின் அருள்நாடி தொழுவார் உண்டே!
புதுமைகளும் அவர்வாழ்வில் நிகழல் உண்டே!
கண்விரித்துக் காணுகின்ற காட்சி யாகக்
கண்டவற்றை வியந்திறையைப் புகழ்வார் உண்டே!

காப்பியப் பாடல் 102

**67 ‘உம்முடைய திருவுள்ளம் விண்ணகத்தில் நிறைவேறுவதுபோல மண்ணகத் திலும் நிறைவேறுக’ என்றே வேண்டும் தூய மனத்தோர் வேண்டுதல், தந்தையாம் இறைவனின் செவிப்பறையைத் தாக்கத்தான் செய்யும்!**

இவையெல்லாம் அன்றாடம் கோடி கோடி
இவ்வுலகில் நிகழ்கின்ற நிகழ்ச்சி யன்றோ!
சுவைத்திந்த நிகழ்வுகளின் உண்மை காண்போர்
சூதொழித்துத் தம்மனத்தின் தூய்மை யாலே
அவைகூட்டி இறைவனுக்குப் புகழைச் சூட்டி
அவராட்சி மலர்ந்திங்கு மணப்ப தற்கே,
எவைவேண்டும் என்பதெல்லாம் இறைவன் இயேசு
இவ்வுலகுக்(கு) உரைத்திருப்ப தெடுத்தே சொல்வார்!

காப்பியப் பாடல் 1022

**68 (விப.3:9-10) “இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டி யுள்ளது... என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்” என்று இறைவன் மோசே மூலம் ஆணை பிறப்பித்தார்.**

ஆனாலும் அன்றந்த எகிப்து நாட்டில்
அடிமைகளாய் இறைமக்கள் துடிக்கக் கண்டு
வானாளும் இறைத்தந்தை இறங்கி வந்து
வன்மனத்துப் பார்வோனுக்(கு) உரைத்தார் ஆணை;
தேனான வார்த்தைகளால் தம்மின் தூதர்
திடமார்ந்த ஊழியராம் மோசே கூற
கோனான மாவலியன் செயலி ழந்தே (கோனான-அரசனான)
கூனிப்போய் இறையாற்றல் அறிந்தே ஏற்றான்!

# இதுதான் உண்மையான நன்றிக்கடன்

–G. *பொனிபாஸ் ஜூலியன்,* புதுவை–9.



**நா**ன் பணிபுரிந்த மருத்துவமனையில் நிர்வாக அதிகாரியாக இருந்ததனால், நானும் மருத்துவ கண்காணிப்பாளரும் தினமும் ஒரு சிறு குழுவினருடன் மருத்துவமனையை ஆய்வு செய்வோம். நோயாளிகளுக்கு என்ன வசதி செய்யலாம், எந்த புதிய நல்ல திட்டத்தை தீட்டலாம் என்று யோசிப்போம். சாதாரண நாட்களைவிட, திங்கள்கிழமைகளில் நோயாளிகள் எண்ணிக்கை சற்று அதிகமாக இருக்கும். நானும் மருத்துவ கண்காணிப்பாளரும், அந்த குழுவுடன் இணைந்து ஆய்வு செய்து வந்த போது, ஒரு நிகழ்ச்சியானது என் மனதை மட்டுமல்ல அனைவருடைய மனதையும் தொட்டது. OPD முதல் மாடிக்கு செல்ல வேண்டுமென்றால் இருபுறமும் உள்ள படிக்கட்டுகளில் ஏறி செல்ல வேண்டும். நாங்கள் சென்ற சமயத்தில் ஏறக்குறைய அனைவரும் ஒரு மெத்தை படிக்கட்டையே உற்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் பார்த்தேன். ஒரு அதிசயமும் தென்படவில்லை. பின்பு ஏன் அனைவரும் அந்த பகுதியை பார்த்து கொண்டிருக்கிறார்கள். சற்று கூர்ந்து பார்த்தபோது ஒரு வாலிபன் ஒரு குழந்தையை தோளில் போட்டுக் கொண்டு இறங்குவதை போல தன் தாயை தோளில் சுமந்துகொண்டு படிக்கட்டில் இறங்கினான். இதுதான் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. சாதாரணமாக யாரும் குழந்தைகளை போல் பெரியவர்களை தூக்கிக் கொண்டு நடப்பதை பார்க்க முடியாது. என் மனம் தாங்காமல் அந்த வாலிபனிடம், “ஏன் தள்ளு நாற்காலியில் உன்னுடைய தாயை அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமே. அதற்காக ஏன் சிரமப்பட்டு அவர்களை தோளில் சுமந்துகொண்டு வரவேண்டும்?” என்று கேட்டேன்.

அவன் கூறிய பதில் என்னை மட்டுமல்ல, எங்கள் குழுவினரையும் அங்கு கூடியிருந்த அனைவரையும் சிந்திக்க வைத்தது. “என் தாய் ஒரு காச நோயாளி எலும்பும் தோலுமாக உள்ளார். அவரால் நிற்கவோ, நடக்கவோ முடியாது. ஏன் நான் அவரை சுமந்து கொண்டு வந்தது தவறா? என்னை பத்து மாதம் தன்னுடைய வயிற்றில் பாதுகாத்தாளே, என்னுடைய முழு வளர்ச்சிக்கும் அவள் தானே காரணம். நோய்வாய்பட்டிருக்கும் இந்த சமயத்தில் கூட அவளுக்கு நான் உதவி செய்யா விட்டால், நான் அவளுடைய மகன் என்று அழைப்பதற்கு என்ன தகுதி இருக்கிறது?” என்று கண்ணீரோடு கூறினான்.

இது பெற்றோர் மீது மகன் வைத்திருக்கும் அன்பின் பிரதிபலிப்பு. தாய் தந்தையர்கள் நடமாடும் தெய்வங்கள். பிள்ளைகள் அவர்கள் மனம் நோகும்படி ஒருபோதும் நடக்கக் கூடாது. அவர்களின் அன்பை பெற்றவர்களாக எப்போதும் வாழ வேண்டும். ஒருவன் ஊரிலே நல்ல பெயர் வாங்குவான். ஆனால் தாய், தந்தையரை மதிக்க மாட்டான். அன்பும் செய்ய மாட்டான் என்றால், அவன் வாழ்க்கை போலியான வாழ்க்கை தவிர உண்மையான வாழ்க்கை அல்ல. குறிப்பாக வயது முதிர்ந்த காலத்தில் அவர்களை அன்புடனும் பாசத்துடனும் வைத்திருக்க வேண்டும்.தாய் தந்தையர் இல்லையென்றால் இங்கு பிள்ளைகள் எங்கே? இன்றைக்கு எந்த நிலையில் பிள்ளைகள் தங்களுடைய தாய், தந்தையர்களை வைத்திருக் கிறார்கள் என்று சொன்னால், அதே நிலை பிள்ளைகளுக்கும் ஏற்படும். தாய் தந்தையரின் ஆசிப்பெற்ற மக்கள் நீடூழி வாழ்வார்கள்.

தாய், தந்தையரை அவமதிக்கும் நிலைமை நம் குடும்பத்தில் எப்போதும் வரக்கூடாது. ஒருவன் திருமணம் செய்வதற்கு முன்னால் அவனுக்கு இரண்டு தெய்வங்கள் அதாவது தாய், தந்தையர். திருமணம் ஆன பிறகு அவனுக்கு நான்கு தெய்வங்கள், மாமனார், மாமியார். இந்த நிகழ்ச்சியை மனதில் கொண்டு நாம் சிறப்பாக வாழ முயல்வோம்.

குறிப்பு: ஒரு அன்பரின் வேண்டுகோளுக்கு இணங்க 14-2-1999 சர்வ வியாபியில் எழுதப்பட்டதின் மறு எழுத்துத் துளிகள்.

# விண்ணக வாழ்வின் 22-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



## மரி விக்டர் சார்லஸ் கையார்

**மண்ணில் அரும்பியது:** 22-11-1983

**விண்ணில் மலர்ந்தது:** 30-10-1996

**"நீதிமான் குறுகிய காலத்தில் நிறைவு எய்தினார். நீண்ட வாழ்வின் பயனை அடைந்தார். அவரது ஆன்மா ஆண்டவருக்கு ஏற்புடையதாய் இருந்தது." – சா.ஞா.4:13,14**

**சார்லிமா!**

**நினையாத பொழுதில் நீ எம்மை விட்டுப் பிரிந்து கழிந்தன ஆண்டுகள் இருபத்தி இரண்டு – உன் நினைவுகள் மறையவில்லை, துயரமும் நீங்க வில்லை. கண்ணீருக்கு அணைப்போட விழிகளுக் கும் இயலவில்லை.**

**குலக்கொடியாய் இறையருளால் வந்துதித்த செல்வம் குருவாகும் வரம் பெற்று பணி செய்யும் என்று எண்ணியே வேண்டாத நாளில்லை – அதற்கும் முன்னரே தன்னிடம் இறைவன் அழைத்ததேனோ!**

இறைவா! உம்மால் அன்புடன் தேர்ந்தெடுத்த எங்கள் அன்பு சார்லியின் ஆன்மா நித்திய பேரின்பத்தில் மகிழ வேண்டுகிறோம். இவரது ஆன்ம இளைப் பாற்றிக்காக புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் 30-10-2018 செவ்வாய் அன்று காலை 6.15 மணிக்கும் 28-10-2018 அன்று பெரும் பண்ணையூர் புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 8.00 மணிக்கும் நடைபெறும் திருப்பலியில் கலந்துகொண்டு ஜெபிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும்**

**தாய்:** ரெஜினா கையார்

**சகோதரர்கள்:** மார்டின் - அலெக்சிஸ்

**அண்ணிகள்:** பிரதீபா - ரூபா

**பிள்ளைகள்:** மாயா, தருண்

**மற்றும் குடும்பத்தினர்.**

புதுவை.

---

**விண்ணக பிறப்பின் 31-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

**விண்ணக பிறப்பின் 4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

பிறப்பு: 08-11-1919
இறப்பு: 23-11-1987



பிறப்பு: 18-10-1929
இறப்பு: 01-11-2014

**திரு. D.பிலோமிநாதன்**
(Revenue Insp.(Retd) Karaikal)

**திருமதி.மரிலூயிஸ்(எ) இருதயமரி**
Karaikal

**இறைவா, இறந்த எம் பெற்றோர் உம் திருமுக ஒளியில் இளைப்பாறச் செய்தருளும்.**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 25-11-2018 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்திலும், மேலும் 25-11-2018 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 4-11-2018 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு புதுவை புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.மேலும் திரு.ஜெயபிரகாசம் சூசைமரி அம்மாள், திரு. D.பிலோமிநாதன் மரிலுாயிஸ் ஆகியோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் 2-11-2018 வெள்ளி அன்று மாலை 4.00 மணிக்குகாரைக்கால் கல்லறை தோட்டத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். மேலும் திருமதி.மரிலுாயிஸ் அம்மாள் 4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலிக்காக புனித தேற்றரவு அன்னை ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு 4-11-2018 அன்று திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

மகன்: **ராஜா (எ) தனராஜா அமலோர்**

மருமகள், பேரன், பேத்தி - புதுவை - 1.

---

## நான் இந்த பூமியில் ஒரு மறைத்தூதுப்பணி

....(பக்.2) சென்ற இதழ் தொடர்ச்சி....

அன்பான இளையோரே, பூமியின் எல்லைகள் இந்நாட்களில் ஒன்றோடொன்று தொடர்புடைய தாகவும் எளிதில் போய்வரக் கூடியதாகவும் உள்ளன. இன்றைய டிஜிட்டல் உலகம் எங்கும் பரவியுள்ள எப்போதும் கிடைக்கக்கூடிய சமூக வலைப்பின்னல்கள் எல்லைகளை கலைத்து, தொலைவை நீக்கி வேறுபாட்டைக் குறைக்கிறது. அனைத்தும் நமக்கு எளிதில் கிடைக்கத்தக்கதாக, நெருக்கமானதாக உடனடியானதாகவே தோன்றுகிறது. இருப்பினும் நமது வாழ்வின் கொடைகள் குறைவுப்படுகின்றன. நாம் கணக்கற்ற தொடர்புகள் வைத்திருக்கலாம். ஆனால், வாழ்வின் உண்மையான குழும உணர்வைப் பகிர்வதில்லை. கடவுளின் அணைப்பின் மூலம் நம்மைத் தெரிவு செய்து பூமியில் இருக்கச் செய்த கொடை அவரது மறைத்தூதுப் பணியை பூமியின் எல்லை வரை பகிர்ந்து கொள்ளக் கோருகிறது. நான் துணிவுடன் சொல்கிறேன்.கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் இளம் ஆணுக்கும் பெண்ணுக்கும் மிகவும் அத்தியாவசிய மானது அவர்களது அழைப்பைத் தேடி கண்டுபிடித்து அதைப் பாதுகாப்பதாகும்.

அன்புக்கு சாட்சியாக: திருஅவைக் குழுக்கள் அனைத்துக்கும் நான் நன்றியுடையவனாயுள்ளேன். அவைகள் உங்களை திருஅவைக்குள் வாழும் கிறிஸ்துவோடு தனிப்பட்ட முறையில் மனவளச் சந்திப்பினை சாத்தியமாக்கியுள்ளன; பங்குகள், சங்கங்கள், இயக்கங்கள், சமயக் குழுமங்கள் மற்றும் பலதரப்பட்ட மறைத்தூதுப் பணி சேவையின் வெளிப் பாடுகள், சின்னஞ்சிறிய நம் சகோதர சகோதரி களுக்குச் செய்யும் சேவையாக தன்னார்வ மறைத் தூதுப் பணியாளர்களாக எத்தனை இளையோர் காணப்படுகின்றனர். (மத்.25:40) அவர்கள் மனித மாண்பை மேம்படுத்தி அன்பின் மகிழ்வுக்கும் கிறிஸ்துவராக இருப்பதற்கும் சான்று பகர்கின்றனர். இத்தகைய திருஅவை அனுபவங்கள் இளையோரை தொழில் ரீதியான வெற்றிக்கு மட்டுமல்ல, கடவுள் கொடுத்த கொடைகளை மேம்படுத்தி அன்புடன் வளர்த்து மற்றவர்க்கு சேவை புரியவும் பயிற்று விக்கிறது. இத்தகைய பெருமைமிக்க, தற்காலிக மறைத் தூதுப்பணி சேவைகள் பயனுள்ள தொடக்க மாகவும், அழைப்பினை தேர்ந்து தெளிந்து நீங்கள் உங்களை முழுமையான கொடையாக மறைத்தூதுப் பணியாள ராக தீர்மானிக்கச் செய்கிறது.

திருத்தந்தை மறைத்தூதுக் கழகங்கள் இளம் நெஞ்சங்களில் பிறந்து எல்லா நாடுகளுக்கும் நற்செய்தியைப் பறைசாற்றுவதற்கு ஆதரவு தரும் சாதனமாகவும், மானுட கலாச்சார வளர்ச்சிக்கும் உண்மையின்பால் தாகம் கொண்டோருக்கு அது பற்றிய அறிவையும் வழங்குகிறது. தாராளமாக அளிக்கப்பட்ட பொருள் உதவிகள் மற்றும் செபங்கள் திருத்தந்தையின் மறைத்தூதுக் கழகங்கள் வழியாக பகிர்ந்தளிக்கப்படுவதன் வாயிலாக, திருஆட்சிப் பீடம் தனிப்பட்ட தேவைகளில் பலன் பெற்றோர் அதற்குப் பதிலாக தங்களின் அன்றாட வாழ்வில் நற்செய்திக்கு சான்றுபகிர்வதை உறுதி செய்ய முடிகிறது. தங்களிடம் உள்ளதை கொடுக்க இயலாத அளவுக்கு யாரும் ஏழை அல்ல. ஆனால் முதலும் முக்கியமானதும் யாதெனில் அவர்கள் என்னவாக உள்ளனர் என்பதே. சிலியில் நான் இளையோர் மத்தியில் ஆற்றிய உரையில் உற்சாகமூட்டிய வார்த்தைகளை மீண்டும் கூற விரும்புகிறேன். கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்றும் நீங்கள் யாருக்கும் தேவையில்லை என்றும், ஒருபோதும் நினைக்க வேண்டாம். நீங்கள் பலருக்கு தேவை. அதைப் பற்றி சிந்தியுங்கள்! ஒவ்வொருவரும் உங்கள் இதயத்தில் சிந்தியுங்கள். "நான் பலருக்கு தேவை" என்று.

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் : 12.12.1936



விண்ணில் : 06.11.2017

குருபட்டம் : 14.04.1964

## அருட்தந்தை முனைவர்
## A. மரிய செல்வம்

"இறைவார்த்தையை அடக்கி வைத்து, அடக்கி வைத்துச் சோர்ந்து போனேன்" - எரே. 20:9-ஆ

**மரியாள் வயிற்றில் மகனேசு முத்தானார்!**
**மரியம் மாள்வயிற் றில்செல் வமானீர்!!**
**விரிந்த வுலகில் விதைத்தீர் இறைவார்த்தை!!!**
**பிரிந்த யெமைநினையும் கலுழ்ந்து!.**

**அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக தொடர்ந்து இறைவனிடம் மன்றாட அன்புடன் வேண்டுகிறோம்.**

பிரிவால் துயருறும்
அருட்பணி. முனைவர் அ. பெஞ்சமின்
தங்கைகள் மற்றும் குடும்பத்தினர்.
இருதயம்பட்டு.

# விண்ணக வாழ்வின் 18-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் : 07.03.1947



விண்ணில் : 28.10.2000

## திரு. பொன். ஜான் போஸ்கோ

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
- யோவான். 11:25

**செபம்**

அன்பின் ஆண்டவரே! இரக்கமே உருவான இயேசுவே! மண்ணக வாழ்வில் மறைந்தாலும், எங்கள் மனதில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அன்பு தெய்வம்

## திரு. பொன். ஜான் போஸ்கோ

அவர்கள், இப்பூவுலகை விட்டு உம் திருவடி சேர்ந்த 18-ஆம் ஆண்டு இன்று நிறைவு பெறுகின்றது. அவரது ஆன்மா உம்மில் அமைதி பெற இறைஞ்சி மன்றாடுகிறோம்.

அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 28-10-2018 ஞாயிற்றுக்கிழமை, காலை 6.00 மணிக்கு புதுவை, வில்லியனூர் தூய லூர்து அன்னை திருத்தலத்தில் மரித்தோர் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி: ஜா. ஆரோக்கியமேரி கிளாரா
மற்றும் மகன்கள், மகள்கள், மருமகன்கள்,
மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.

3, அன்னை இல்லம், லூர்து நகர், வில்லினூர், புதுவை-605 110

# மண்ணக பிறப்பின் நூற்றாண்டு நினைவு அஞ்சலி
# விண்ணக வாழ்வின் 22-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி







**மண்ணில் மலர்ந்தது 30-10-1918**

**விண்ணில் மலர்ந்தது 01-11-1996**

## திருமதி. ரோசாலி மரியநாதன்

**"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாக திகழ்வாய்" - (எசா.63:3)**

நவகிரகங்கள் போல் உம்மை சுழன்று வந்தோமே
எம்மை மகிழ்வித்த இன்பக் கதிரோனே – உம்
அன்புக் கதிரொளியில் இதழ்விரித்தோம் அக்காலை,
எம் மாலைப்பொழுதில் உடனிருப்பாய் என்றிருந்தோம்.
நல்லோர் வாழ்த்தும் சிற்பமென செதுக்கி, எம்மை
அறநெறியில் வளர்த்துவிட்டு மறைந்துவிட்டாய்.
ஞான மேய்ப்பர்கட்கு உதவிடல் கடன் என்றாய்
இறையழைப்பை ஊக்குவிக்க குரு மாணவர்கட்கு
உதவிடல் உத்தமமென முனைந்து நின்றாய்.
ஈவதில் மகிழ்ச்சி காண பயிற்றுவித்தாய் – நீர்
பயிற்றுவித்த பாடம் யாவும், எம்
வாழ்க்கைச் சரிதையின் காவியமாம்.
நெஞ்சில் நீங்கிடா ஓவியமே,
உம் பண்பும் பாசமும் ஆழ்விசுவாசமும்
கரை காண்பதில்லை எம் நினைவலைகளில்.
உம் மண்ணகப் பிறப்பின் நூற்றாண்டில்
நன்றியின் நீங்கா நினைவுடனே
மறவோம் உம்மை எம் செபங்களில்
மறவாதீர் எம்மை இறைதிருமுன்
இறைவனில் கலந்துவிட்ட தியாகச் சுடரே!
மீண்டும் வான்வீட்டில் காண்போம் ஒருநாள்.

நினைவுத் திருப்பலி: 30-10-2018 செவ்வாய்க்கிழமை
மாலை 5.30 மணிக்கு, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும்,
மாலை 6.00 மணிக்கு, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும்,
மாலை 6.00 மணிக்கு அரியாங்குப்பம், ஆரோக்கிய அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப் படும். அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிகொள்ளவும்.

என்றும் உம் நினைவில் வாழும்
அன்பு மகன் - மருமகள்
Prosper Marianadin - Françoise Marianadin
அன்பு மகள்கள்
Christina Saminadin, Leonie Gilbert
Doris Soosairaj, Justine Kolandai
Gisele Adaikalam, Ginette Antony
பேரப்பிள்ளைகள்,
கொள்ளுப்பேரப்பிள்ளைகள், எள்ளு
பேரன்கள், மற்றும் குடும்பத்தினர்,
நண்பர்கள்.

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே.

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி







**தோற்றம்**
**12-06-1933**

**ஆயர் பட்டம்**
**29-03-1978**

**குருப்பட்டம்**
**15-04-1961**

**மறைவு**
**04-11-2017**

## மேதகு பேராயர் Dr. S. மைக்கேல் அகஸ்டின் D.D.,Ph.D.,

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாக திகழ்வாய்" - (எசா.63:3)

எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பேராயரே!
"பொருளும் பொன்னும் போகமும் அல்ல
நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்
இன்னும் பிறவாமை வேண்டும் - பிறந்தால்
நின்னை மறவாமை வேண்டும்" என்ற பரிபாடல்
வரிகளுக் கேற்ப உம் வாழ்க்கையை
அமைத்துக்கொண்ட அன்பு சீலரே.

**"ஆகட்டும்"** என்ற அன்னை மரியாவின்
ஆன்மீகத்தை உமது விருதுவாக்காக ஏற்று
வாழ்ந்த அடியாரே!
நீவிர் நித்திய இளைப்பாற்றி அடைய உமக்காக
செபிக்கிறோம். முடிவில்லாத பேரின்ப ஒளி
உம்மேல் ஒளிர்வதாக.

நவம்பர் மாதம் 4-ம் தேதி (04-11-2018) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் மேதகு பேராயர் **அந்தோணி ஆனந்தராயர்** ஆண்டகை தலைமையில் கூட்டு பாடற்திருப்பலி நிறைவேற்றப்படும். திருப்பலிக்குப்பின் பேராயர் மைக்கேல் அகஸ்டின் ஆண்டகை அவர்களது கல்லறை மந்திரிக்கப்படும். அனைவரும் இதில் கலந்துகொண்டு நமது முன்னாள் பேராயருக்காக செபிக்க அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அருள்பணி A.J. **லாரன்ஸ்**
அருள்பணி R. **ஜோசப்ராஜ்**
அருள்பணி Z. **ஜான் சிரில்**
மற்றும் குடும்பத்தார்.

முதல் பக்கத் தொடர்ச்சி...

அங்கேயே நிறைவு காணும் ஆபத்து உள்ளது என்றும், அத்தகைய வாழ்வு, இயந்திர கதியில் ஒரே விதமாகச் செல்லும் வாழ்வாக மாறிவிடுகிறது என்றும் திருத்தந்தை தன் மறையுரையில் எச்சரிக்கை விடுத்தார்.

**அனைத்தையும் இழக்கத் துணிந்த புனிதர்கள்:** அனைத்தையும் இழக்கத் துணிவு கொண்டு, இயேசுவை மட்டுமே பின்பற்ற விழைந்த புனிதர்கள், பாரம் ஏதுமின்றி, சுதந்திரமாக, மகிழ்வாக வாழ்ந்தவர்கள் என்று கூறியத் திருத்தந்தை, ஒவ்வொரு புனிதரையும் தனிப்பட்ட வகையில் குறிப்பிட்டு, அவர்களைப் பற்றிய சில எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார்.

**திருத்தந்தை 6ம் பவுல், பேராயர் ரொமேரோ:** திருத்தூதர் பவுலின் பெயரைத் தாங்கிய புனிதத் திருத் தந்தை 6ம் பவுல், அந்தத் திருத்தூதரைப் போலவே, புதிய பகுதிகளை தன் நற்செய்தியால் வென்றவர் என்றும், புனிதம் என்ற நிலைக்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை தன் உரைகளிலும், எழுத்துக்களிலும் உரைத் தவர் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப் பிட்டார். பேராயர் ரொமேரோ அவர்கள், தன்னுடைய பதவி வழங்கிய பாதுகாப்பைத் துறந்து, தன் உயிருக்கு வந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல், வறியோருடன் தன்னையே அடையாளப்படுத்திக் கொண்டதால், நற்செய்தியை தன் வாழ்வாக மாற்றியவர் என்று திருத்தந்தை குறிப்பிட்டார்.

**ஏனைய ஐந்து புனிதர்கள்:** அதே வண்ணம், அருள்பணி யாளர்களான பிரான்செஸ்க்கோ ஸ்பிநெல்லி, மற்றும், வின்சென்சோ ரொமானோ, அருள்சகோதரிகளான மரிய கத்தரீனா காஸ்பெர், நசாரியா இஞ்ஞாசியா, நேபிள்ஸ் பகுதியிலிருந்து வந்த இளையவர், நுன்சியோ சுல்பிரிசியோ ஆகிய ஐவரும், இறைவனுக்காகவும், அயலவருக்காகவும் தங்களிடமிருந்த அனைத்தையும் தியாகம் செய்தனர் என்பதை, தன் மறையுரையின் இறுதியில் கூறி முடித்தார், திருத்தந்தை பிரான்சிஸ். ●

**மறைப்பணிகளின் இதயமாக விசுவாசப் பரப்புதல்:** “இறைவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள, புனிதர்களோடு நாம் கொள்ளும் உறவு உதவியாக உள்ளது. இதன் விளைவாக, நாம் இவ்வுலகில், நம்பிக்கைக்கு சான்று பகர்பவர்களாக வாழ முடியும்” என்ற சொற்களை, இத்திங்களன்று தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். மேலும், அக்டோபர் 22, இத்திங்களன்று, திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் அவர்களின் திருநாள் சிறப்பிக்கப்பட்டதையொட்டி, புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில், அப்புனிதரின் கல்லறை அமைந்துள்ள பீடத்தில், இத்திங்கள் காலை சிறிது நேரம் அமைதியில் செபித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இதற்கிடையே, இஞ்ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்ட உலக மறைபரப்புப் பணி நாளைக் குறித்தும் புலம்பெயர்ந்தோர், குடியேற்றதாரர் ஆகியோருக்கு ஆதரவாக உரோம் நகரிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் அம்மக்களுடன் இணைந்து பயணத்தைப் பகிர்வோம் என்ற நடைபயணம் இடம்பெற்றதைக் குறித்தும், இரு டுவிட்டர் செய்திகளை ஞாயிறன்று வெளியிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ். ‘திருஅவை மறைப்பணிகளின் இதயமாக விளங்கும், விசுவாசத்தைப் பகிர்தல் என்பது, ஒருவரையொருவர் தொற்றிக் கொள்ளும் அன்பிலிருந்து வருகிறது’, என தன் முதல் டுவிட்டர் செய்தியிலும், காரித்தாஸ் இயக்கத்துடன், புலம்பெயர்ந்தோர் மற்றும் குடிபெயர்வோருடன் இணைந்து 10 இலட்சம் கிலோ மீட்டர் நடந்து செல்வோம். இயேசுவின் முகத்தைக் காண்பதற்கு அழைக்கப்பெற்றுள்ள நாம் அனைவரும், எம்மாவுஸ் சாலையில் நடந்து செல்கிறோம் என தன் இரண்டாம் டுவிட்டர் செய்தியிலும் எழுதியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். குடிபெயர்வோர் மற்றும் புலம்பெயர்வோருடன் நம் ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கும் விதமாக, உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்கள், புலம்பெயர்வோருடன் மேற்கொள்ளும் பயணங்களால் 10 இலட்சம் கிலோ மீட்டர்களை இரண்டாண்டுகளில் எட்டவேண்டும் என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த ஆண்டு அழைப்பு ஒன்றை விடுத்திருந்தது, இங்கே குறிப்பிடத்தக்கது.

**அமிர்தசரஸ் நகர் விபத்துக்கு திருத்தந்தையின் அனுதாபத் தந்தி:** இந்தியாவின் அமிர்தசரஸ் நகரில் நடைபெற்ற இரயில் விபத்தில் பலியானவர்கள் குறித்து, திருத்தந்தையின் ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிட்டு, இரங்கல் தந்தியொன்றை அனுப்பி யுள்ளார், திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின். இந்த இரயில் விபத்தால் பாதிக்கப்பட்ட அனைவரோடும் இதயம் நிறைந்த ஒருமைப்பாட்டுணர்வை திருத்தந்தை வெளியிடுவதாகக் கூறும் திருப்பீடச் செயலரின் செய்தி, உயிரிழந்தோர், தங்கள் நெருங்கிய உறவுகளை இழந்தோர், காயமடைந்தோர், அனைவருக்கும், திருத்தந்தை அவர்கள், தன் செப உறுதியை வழங்கி, இந்திய ஆயர் பேரவை, அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அமிர்தசரஸ் நகருக்கருகே ஜோதா பதக் என்ற இடத்தில் நடைபெற்ற தசரா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இராவண உருவ பொம்மை எரிக்கப்படுவதை, இரயில் தண்டவாளங்கள் அருகே நின்று பார்த்துக் கொண்டிருந்த மக்கள் மீது விரைவு வண்டியொன்று மோதியதில், 61 பேர் கொல்லப்பட்டுள்ளனர், மற்றும் 72 பேர் காயமடைந்துள்ளனர் என்று, ஊடகங்கள் கூறுகின்றன.

இன்றைய இளம் தலைமுறையினர் மத்தியில் தனிமை உணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக ஓர் ஆய்வு அதிர்ச்சி தகவல் அளிக்கிறது. 18 முதல் 30 வயதுக்குட்பட்ட ஆண்களில் 73 சதவீதம் பேர் தங்களை தனிமைப்படுத்திக் கொள்வதாகவும், இதுவே பெண்களில் 31 வயது முதல் 40 வயதுக்குட்பட்டவர்களில் 83 சதவீதம் பேர் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்கின்றனர் என்றும் அந்த புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. - தினமணி. 23.10.18.

சர்வதேச அளவில் ஆண்டுதோறும் 11.5 கோடி டன் வாழை உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், 23 சதவீதத்துடன் (சுமார் 3 கோடி டன்) இந்தியா முதலிடத்தில் உள்ளது. வாழைப்பழத்தின் எடையில் 3-இல் ஒரு பங்கு என்ற அளவில், பயன்பாடுமிக்க சுமார் 3.8 கோடி டன் வாழைப் பழத் தோல்கள் ஆண்டுதோறும் வீணாகி வருகின்றன.

*- தினமணி. 23.10.18*

கிறிஸ்துவ புண்ணிய பூமி திருப்பயணம்
எகிப்து, இஸ்ரேல் & ஜோர்டான்
9 இரவு / 10 நாட்கள் - ரூ.88,000/- + 30 USD (Tips)
2019 மார்ச் 15, ஏப்ரல் 20 மற்றும் மே 1, தேதிகளில் 3 குழுக்கள்
ஐரோப்பியா கிறிஸ்துவ திருப்பயணம்
(இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுக்கல் & சுவிட்சர்லாந்து)
15 நாட்கள் - ரூ.1,90,000/- + 30 EURO (Tips)
மலேசியா & சிங்கப்பூர் (6 இரவு / 7 பகல்) - ரூ.65,000/-
2019 ஜனவரி 12 முதல் 18 வரை...
துபாய் & அபுதாபி - 5 நாட்கள் - ரூ.65,000/-
2019 ஜனவரி 25 முதல் 29 வரை...
வேறு கட்டணம் கிடையாது...
2018
Contact:
A.JOSEPH FELIX
Cell:94433 85423, 86819 34776
I.PHILOMINAL, Ret.Teacher
Cell:99940 40245, 81481 72245
I.BELAVENDIRAN Ret.Military
Cell:94442 65510, 93611 21619

GOOD Shepherd Tourism

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.